

# பரலோக பொக்கிஷங்கள்

**ஆவியானவர் நம்மீது தங்குவார்!** [யோவான் 1:33]



## நம்மை தேவனுக்குத் தந்து ஒதுங்குவதே நலம்!

நம்முடைய சொந்த திட்டங்கள், மனுஷீக முயற்சிகள், சுயமான தீர்மானங்கள் ஆகிய 'இளைப்பாறுதலற்ற இவை அனைத்தும்' நமக்குள் கிரியை செய்ய விரும்பும் தேவனுடைய வல்லமையை வெகுவாய் பாதித்து விடுகிறது! தேவனோ நம் முழுமையையும் தம்மைக் கொண்டே நிரப்ப விரும்புகிறார். இதிலிருந்து தோன்றும் இனிமையான விளைவுதான் 'நாம்' வெளியேற்றப்படுகிறோம்! தனக்குரிய ஐந்து அப்பத்தையும் இரண்டு மீனையும் கர்த்தரிடம் கொடுத்துவிட்டு ஒதுங்கிய சிறுவனைப்போல்! 'இப்போது' கர்த்தர் நமக்காக கிரியை செய்திடுவார்!

அவர் நம்மை ஆட்கொள்வதே, ஜெயம்!

-tr

பெட்டகம் 42
ஜூன் 2026 பரல்கள் 06



## அப்போஸ்தலன் பவுலை புறக்கணித்த, கொரிந்தியர்கள்!

அப்போஸ்தலனாகிய பவுல் வாழ்ந்த காலங்களில் நடந்தது என்ன தெரியுமா? அவருடைய முதல் நிருபத்தை வாசித்த கொரிந்தியர்கள் "பவுலின் நிருபங்கள் பெலன் கொண்ட யோசனைகள்! மிகுந்த பலமுள்ளவைகள்!" என வானளாவ போற்றினார்கள். பின்பு, பவுல் நேரிடையாக கொரிந்து பட்டணத்திற்கு வந்து பிரசங்கித்த போது, பவுலைப் பார்த்த கொரிந்தியர்கள் "இது என்ன? இவனது சரீரத்தின் தோற்றம் பலவீனமாயுள்ளது! இவனது வசனிப்புகள் கவர்ச்சியாய் இல்லையே!!" (2கொரி.10:10) என, பவுலை உதாசீனம் செய்தார்கள். இதுபோன்ற கொரிந்திய சபை மனநிலைதான் இன்றைய சபைகளில் ஆக்கிரமித்திருக்கிறது. ஒரு பிரசங்கியை தங்கள் பிரசங்க பீடத்திற்கு அழைத்திடும் சபை "இந்த பிரசங்கியின் தோற்றமும், அந்தஸ்தும் மின்மினுங்கும் கவர்ச்சியாய் உள்ளது!" என்ற அடிப்படையிலேயே, தங்கள் சபையில் பேச அழைக்கிறார்கள்.

ஆனால், மின்மினிங்கிய அந்த பிரசங்கிகள் 'இன்றோ' பரிசுத்தத்தின் வைராக்கியம் ஒடுங்கி குளிர்ந்து போனார்கள்! அந்த பிரசங்கியல்ல, அவரின் வெளித்தோற்ற கவர்ச்சியில் ஈர்க்கப்பட்ட ஜனங்களே வஞ்சிக்கப்படுகிறார்கள்!

*-Ed*

**2026 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்**

வருட சந்தா ரூ.170/- தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு ஜுன் 20-ம் தேதிக்குள் அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும். புதிதாய் வாங்குபவர்கள் 'புதிது' என்று குறிப்பிடவும்.நன்றி!

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)
பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலம் **G-Pay** அனுப்பலாம்.

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : (for Spiritual messages) paralogapokkishangal
You Tube : (for Gospel messages) gospelforall

## ‘எவ்வித துன்பத்திலும்’ விசேஷித்த கிருபை தரும் ஆண்டவர்!

*ஒரு உத்தம விதவையின் சாட்சி*

*முற்காலத்து கிறிஸ்தவ சரித்திரத்தில், ஆஸ்திரேலியாவில் வசித்த விதவை சகோதரி ஒருவர் இருந்தார். அந்த சகோதரி ஒரு சிறந்த ‘தேவ பெண்மணியாய்’ வாழ்ந்து வந்தார்கள். அந்நாட்களில், அந்த சகோதரியின் ஆவிக்குரிய குணங்கள், சுற்றி வாழ்ந்த எல்லா ஜனங்களாலும் அறியப்பட்டிருந்தது. அவர்கள் கர்த்தர் மீது வைத்திருந்த விசுவாசம் மிக உறுதியானதொன்றாய் இருந்தது. அவர்களுடைய கணவன் மரித்தபோது, தன் மனைவியோடு ஐந்து பையன்களை வைத்துச் சென்றார்.*

**“பக்தியான அந்த விதவை சகோதரி “கர்த்தர் தகப்பனற்ற பிள்ளையையும், கணவனை இழந்த விதவையையும் ஆதரிக்கிறார்” (சங்கீதம் 146:9) என்ற வசனமே, அவர்களுக்கு உறுதுணையாய் இருந்து பெலப்படுத்தியது.**

*அவர்களின் ஐந்து பையன்களும் “கர்த்தருடைய சிட்சையிலும், போதனையிலும் வளர்ந்து வரும் சிலாக்கியத்தை” தன் பக்தியுள்ள தாயார் மூலம் பெற்றிருந்தார்கள். அந்த ஐந்து பையன்களும், நல்ல வாலிப பருவத்தில் “இயேசுகிறிஸ்துவை ஆண்டவரும், இரட்சகருமாய்!” அறிக்கை செய்து, அவரை ஏற்றுக்கொண்டார்கள்!*

*இவ்வாறாக, மிகுந்த சாட்சியோடும், சமாதானத்தோடும் வாழ்ந்து வந்த காலத்தில், தேசத்தில் யுத்தம் வெடித்து, எல்லா வாலிபர்களும் அந்த நாட்டின் படைகளில் சேர அழைப்பு வந்துவிட்டது! படையில் பெயர் கொடுக்க வேண்டிய நேரத்தில், இந்த விதவை அம்மாளின் விருப்பத்திற்கு இணங்க, ஐந்து வாலிபர்களும், தரைப்படையின் ஒரே பிரிவில், ராணுவத்தில் சேர்க்கப்பட்டார்கள். பல மாதங்களாய் நடந்து வந்த யுத்த நேரத்தில், இந்த விதவைத் தாய், ஒவ்வொரு நாளும் தன் வாலிப பிள்ளைகளுக்காய் ஜெபித்து, கர்த்தருடைய பாதுகாப்பிற்கு அவர்களை ஒப்புக்கொடுப்பார்கள்!*

அவர்கள் வாழ்ந்த சிற்றூரில் 'கிராம சபை போதகர்' கூட்டங்கள் நடத்துவதோடு, தேசத்தின் யுத்த பகுதிகளை விசாரிக்கும் பொறுப்பையும் பெற்றிருந்தார். யுத்தத்தில் யாரெல்லாம் மடிந்தார்களோ, அவர்களின் பெயர் இந்த கிராம சபை போதகருக்கு அனுப்பப்பட்டு, குறிப்பிட்ட அந்தந்த வீட்டிற்குத் தகவல் தரும்படி நியமிக்கப்பட்டிருந்தார். அந்த கிராம சபை போதகர் தெய்வ பயத்தோடு வாழ்ந்த ஒரு நல்ல கிறிஸ்தவ ஊழியர்! ஆகவே, "இறந்தவர்களின் வருத்தமான செய்தியை" அதற்குரியவர்களிடம் போய் சொல்லும்போது, கண்ணீருடன் சேர்ந்து ஜெபிப்பார்!

ஒருநாள் தன் வீட்டு வாசலில், மஞ்சள் நிற தந்தி கடிதத்தோடு நின்று கொண்டிருந்த அவரை, விதவைத் தாய் பார்த்தார்கள். அந்த போதகரும் சிலைபோல் நின்று அந்த விதவை அம்மாளை அமைதியாய் பார்த்தார். அந்த அமைதியை உடைத்து, உள்ளே வந்து அமரும்படி விதவைத் தாய் கேட்டுக்கொண்டார்கள்.

*பின்பு, தன் குரல் நடுங்க "**போரில் இறந்தது எந்த மகன்?**" எனக் கேட்டார்கள். அந்த ஊழியரோ, பதில் ஏதும் சொல்லமுடியாமல் கண்கலங்கினார். தகவல் சொன்னவுடன் இந்த விதவை அம்மையார் 'மனமுடைந்து அழுவார்களே' என்ற எண்ணம் அவரை வாட்டியது. யுத்தத்தில் இறந்த மகன் யார்? எனக் காத்திருந்த அம்மையாருக்காக, அந்தப் போதகர் தன் மனதை திடப்படுத்திக் கொண்டு "ஐந்து பேரும் இறந்து விட்டார்கள்!" எனக்கூறி அழத் தொடங்கிவிட்டார். செய்தி கேட்ட அந்த அம்மாளின் முகம் வெளிறியது. வாய் பேச வராமல் நடுங்கியது! கண்ணீர் குளமாக மாறி வடிந்தது.... பின்பு தன்னை திடப்படுத்திக் கொண்டு நேராக உட்கார்ந்து "ஐந்து பேரும் கர்த்தருடையவர்கள்!" ஐந்து பேரையும் தன்னோடு இருக்கும்படி கர்த்தர் தெரிந்து கொண்டார் என, விசுவாச தைரியத்தோடு அறிக்கை செய்தார்கள். கண்ணீரோடு ஜெபித்துவிட்டு, அந்த கிராம சபை போதகர் மெதுவாய் நடந்து சென்றுவிட்டார்!*

**" அந்த போதகர் தன் மனதில் உணர்ச்சி பொங்க அறிக்கை செய்தது என்னவென்றால், ஐந்து வாலிப பையன்களையும் இழந்த இந்த தாய், மன உளைச்சலாகி சோர்ந்துபோய் விடவில்லை. "ஒரு முறுமுறுப்பும், ஒரு கசப்பும், ஒரு குறை சொல்லுதலும் அவர்கள் வாயிலிருந்து புறப்படாமலிருந்ததை நான் கண்டு, மிகுந்த ஆச்சரியப்பட்டேன்!" என்ற செய்தியை, அவர் சென்ற இடங்களிலெல்லாம் பரவசத்தோடு சாட்சியாகக் கூறினார்!**

அந்த விதவை சகோதரி, தன் ஐந்து குமாரர்களை, 'என்றும் தன் உடன்படிக்கையை காக்கும்' கர்த்தரிடமே ஒப்படைத்து வாழ்ந்த வர்கள். ஆகவே, **இந்த இழப்பான நேரத்தில் "கர்த்தருடைய அன்பையும், கர்த்தருடைய ஞானத்தையும், கேள்வி கேட்பதற்குரிய சிறந்த விடை, என் இரட்சகருக்கு மாத்திரமே தெரியும்!"** எனக்கூறிய அறிக்கை, அந்த கிராமத்து மக்களில் அனேகரை, கர்த்தரிடம் மனந்திரும்பச் செய்துவிட்டது.

*அந்த கிராமத்துப் போதகர் இதைக்குறித்து கூறும்போது "எங்கள் கிராமத்தில், பல வருடங்களாய் நான் பிரசங்கித்த நூற்றுக்கணக்கான பிரசங்கங்களைவிட, 'அந்த விதவைத் தாயின் சாட்சி' ஜனங்களிடத்தில் மாபெரும் கிரியை செய்து முடித்தது! என, உளமார கூறினார். அந்த விதவையம்மாளுக்கு கிடைத்த பரிசோ "புத்திகெட்டாத தேவ சமாதானம்" என்பதை அந்தக் கிராமத்தார் அனைவரும் கண்டார்கள்!*

நாம் தியானித்த 'இந்த கிறிஸ்தவ விதவையைப் போலவே' எல்லோரும் இருக்கவேண்டும் என நான் கூறவில்லை. தன் வாழ்வில் சம்பவித்த இவ்வளவு பெரிய நஷ்டத்திற்கு ஈடு கட்டும் போதுமான '**விசேஷித்த கிருபையை**' கர்த்தர் அவர்களுக்கு கொடுத்து விட்டார்! என மாத்திரமே கூறிட முடியும். மரித்துப்போன நம் நேசத்திற்குரியவர்களுக்காக அழுவதை, வெட்கமாகவோ அல்லது தோல்வியாகவோ நம்மில் ஒருவரும் எண்ணிவிடக் கூடாது! ஆண்டவராகிய இயேசுகூட மரித்த லாசருக்காய் அழுதார்!

'உணர்வுள்ள பாசம்' என்பது வேறு 'முறிந்துபோன ஆவி' என்பது வேறு! நாம் இந்த சரீரத்தில் வாழும் வரை அன்பின் பாசம், அன்பின் வேதனை, அன்பின் கண்ணீர் ஆகியவை கொண்டு வாழ்வதும் இயேசு கற்பித்த ஆவிக்குரிய சிறந்த தன்மையே ஆகும்! 'ஒருவருக்கொருவர் காண்பித்திடும்' பாச உணர்வுகள் நிலைத்திருக்கும் தெய்வ அன்பின் ஒரு சாரமேயாகும்!

இந்த விதவையம்மாவுக்கு நேர்ந்த நெகிழ்ச்சி மிகுந்த செய்தி என்னவெனில்: "நசுக்கப்படும் துக்க நேரத்தில், உத்தம கிறிஸ்தவர்கள் பிரதிபலித்த ஜீவிய சாட்சி 'உலகத்தாரைப் போல் இல்லாமல்' ஆச்சரியப்படத்தக்க பல ரூபமாய் இருந்து வந்துள்ளது!" இழப்பை எதிர்கொண்ட அத்தனை உத்தம கிறிஸ்தவர்களும், தேவனுடைய வாக்குதத்தங்களால் தேற்றப்பட்டனர். கர்த்தரிடம் அவர்கள் பெற்ற மனம் குளிர்ந்த வாக்குதத்தங்கள், அவர்களுக்கு மாத்திரமே தெரியும்! மற்ற ஒருவருக்கும் அது தெரிவதில்லை! அல்லேலூயா.

- *வில்லியம் மேக்டோனால்டு*

## நம் வாழ்வின் ஏமாற்றங்களையும், இயேசு சுமந்து தீர்த்தார்!

*திரும்பிய 'கெட்ட குமாரனை' அளவில்லாது நேசிக்கும் பரமபிதா*

**வீ**ட்டைவிட்டு வெளியே ஓடிவிட்ட தன் பிள்ளையின் மீது பாசத்தில் துடிக்கும் ஒரு தகப்பனை எண்ணிப் பாருங்கள். இந்த மன சஞ்சலத்திற்கு விடை தருவதே, இயேசு கூறிய கெட்டகுமாரன் உவமை! அந்த உவமையில் அவர் கொண்டு வந்த முடிவைப் பாருங்கள்: பூரண மகிழ்ச்சி! தகப்பனோடு இணைந்து வாழும் பாக்கியம்! வெகு நீண்ட காலமாய், தன் பிள்ளைக்காக காத்திருந்த தகப்பன் 'தளர்ந்த நடையோடு திரும்பி வரும்' மகனை கண்ட மாத்திரத்தில், வாசல் கதவை வேகமாய் திறந்து அவனை வரவேற்க ஓடிச் சென்றார். **மனந்திரும்பி வந்த மகனை** கட்டியணைத்த தகப்பன், அவனது கேவலமான வாழ்க்கையைக் குறித்து ஒரு கேள்வியும் கேட்கவில்லை!

ஆம், இயேசு வந்து, மிகப்பெரிய மாற்றங்களை உண்டாக்கி விட்டார்! அந்த மாற்றம் தேவனுக்கும்! நமக்கும்! உரியது.

> **"ஆண்டாண்டு காலமாய் இல்லாதிருந்த "தெய்வ உறவை" இயேசு நிரூபணமாய் இணைத்து சாதித்தார்!**

*பழைய ஏற்பாட்டு காலங்களில், இஸ்ரவேலர்களில் ஒருவன் 'தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை' தொட்டவுடன் சுருண்டு விழுந்து மடிந்தான்! ஆனால், நம் மாம்சத்தில் தேவகுமாரனாய் வெளிப்பட்ட இயேசுவைத் தொட்ட ஜனங்களோ, சரீர நோய் தீர்ந்து குணமாக்கப்பட்டார்கள்! யூதர்கள், தேவனுடைய பெயரை எழுத்துக்கூட்டிச் சொல்வதற்குக்கூட தயங்கி அஞ்சுவார்கள். ஆனால் இயேசுவோ, தேவனை அழைப்பதற்கு "அப்பா! பிதாவே!" என்ற இனிய உறவை ஏற்படுத்தினார். இவ்வாறு இயேசுவின் மூலமாய், தேவன் நம் யாவருக்கும் நெருங்கி வந்த உறவின் ஆச்சரியத்தைப் பாருங்கள்!*

கிரேக்க தத்துவ ஞானி **அகஸ்டின்** கிறிஸ்தவத்தை குறிப்பிடும் போது, தங்களின் கிரேக்க தத்துவ இறையாண்மையில், சர்வ வல்ல தெய்வம் அப்பழுக்கற்றவர்! பூரணமானவர்! காலங்களுக்கு அப்பாற்பட்டவர்! "இத்தனை பிரகாசமான தெய்வத்தை" பாலிய மோகமும், தாறுமாறான ஜீவியமும் கொண்ட, மாறுபாடான மனுஷன், சம்பூரண தேவனோடு நெருக்கமாய் வருவது எப்படி? என, சிறிதேனும் புரிந்துகொள்ள முடிவதில்லை எனக்கூறி வியப்படைந்தார்! மேலும், "எத்தனையோ மார்க்கத் தாறுமாறுகளுக்குள் பிரவேசித்து, தேவனைத்

தேடிய நான், முடிவாக சுவிசேஷங்களில் நான் கண்ணுற்ற இயேசுவிடம் வந்து சேர்ந்தேன்! இதுவரை நான் கண்டறியாத திருப்தியை அவரிடத்தில் நான் கண்டு கொண்டேன். சுவிசேஷம் அறிவித்த இயேசு, பாவியான மனுக்குலத்திற்கும், சம்பூரண தூய்மையான தேவனுக்கும் இடையில், தன்னையே ஓர் ஆச்சரியமான பாலமாய் தந்தருளி ஏற்படுத்தி விட்டார்!'' எனவும் வியந்தார்!

தேவனோடு வைத்துக்கொள்ள முடியும் ஐக்கியத்தை, வேதாகமத்திலுள்ள 'எபிரெயர் புத்தகம்' வியந்து கூறுகிறது. இயேசுவுக்கு முன்பான பழைய ஏற்பாட்டுக் காலங்களில், தேவனிடத்தில் நெருங்கி வர, மனுஷன் எத்தனை வழிமுறை பிரயாசங்களை கைக்கொள்ள வேண்டியதாய் இருந்தது என்பதையே எபிரெயர் புத்தகம் முதலாவது கோடிட்டு காண்பித்துள்ளது. வருடத்திற்கு ஒருமுறைதான் ''பாவ பரிகாரம்'' என்ற ஒருநாள் நியமிக்கப்பட்டிருந்தது. அந்த நாளில், ஒரே ஒரு மனுஷனாகிய ''மகா பிரதான ஆசாரியர்'' என அழைக்கப்பட்ட அவர் மாத்திரமே, மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்திட முடியும்! அவ்வாறாக அவர் பிரவேசிக்கும்போது தன்னை விசேஷமாய் சுத்திகரிக்கும் நிகழ்ச்சிக்குப் பிறகு, விசேஷித்த உடுப்புகளை அணிவது முதல், ஐந்து பல்வேறு விதமான பலிகளை செலுத்தி....

*மகா பிரதான பரிசுத்த ஸ்தலத்திற்குள் போகும்போது 'மிகுந்த பயத்துடனேதான்' உள்ளே பிரவேசிப்பார்! அவரது அங்கியின் தொங்கலில் ஓசையிடும் மணிகளை அணிந்து கொள்வார். அவருடைய இடுப்பிலிருந்து ஒரு நீண்ட கயிறு தொங்கவிடப் பட்டிருக்கும். அவர் தன்னை சுத்திகரித்துக் கொண்ட பரிசுத்தத்தில் சிறிது குறைவு ஏற்பட்டாலும், மரித்து கீழே விழுந்து விடுவார். மணியோசையின் சப்தம் நின்றுவிடும்! வெளியில் நிற்கும் ஆசாரியர்கள் தொங்கிக்கொண்டிருக்கும் கயிற்றை இழுத்து, மரித்துப்போன பிரதான ஆசாரியரை வெளியில் போடுவார்கள்.*

**"ஆனால், இப்போது புதிய ஏற்பாட்டின் எபிரெய புத்தகம் மகிழ்ச்சியுடன் அறிவுறுத்திடும் நற்செய்தி என்னவெனில்: ''கிருபாசனத்தண்டைக்கு நாம் தைரியமாய் சேரக்கடவோம்'' (எபி 4:15,16) என, அச்சமின்றி அழைத்திடும் விந்தையைப் பாருங்கள்!**

இந்த வசனங்களை, ஒரு யூத பாரம்பரிய பக்தன் படிப்பானென்றால், அவனுடைய ஆச்சரியத்திற்கு அளவே இருக்காது! ஆகிலும் உண்மை என்னவென்றால், இயேசு சிலுவையில் மரித்த அந்த தருணத்தில், ஆலயத்திற்குள் தொங்கிக் கொண்டிருந்த கடினமான திரைச்சீலை,

*மேலிருந்து கீழாக இரண்டாய் கிழிந்தது! உண்மைதான், மகா பரிசுத்த ஸ்தலத்தின் வாசல் திறக்கப்பட்டு விட்டது. அதை இந்த எபிரெய புத்தகம் மிகுந்த மகிழ்ச்சியோடு* "**நாம் தேவனிடத்தில் கிட்டிச் சேரக்கடவோம்**" *என முடிவுரை தந்து பூரித்தார்!*

*'தேவன் என்னைக் கைவிட்டாரோ?' என மனுஷன் தேவனிடத்தில் அடைந்த ஏராளமான ஏமாற்றங்களுக்கு இயேசு வந்து, விடை கொடுத்துவிட்டார். இயேசு நம் பாவத்தை மாத்திரமல்ல "நம் வாழ்வின் ஏமாற்றங்களையும்" சுமந்து தீர்த்தார்! (சங்.22:11). ஆகவே, இயேசு இந்த பூமிக்கு வந்தது நிமித்தம், நாமே தேவனிடத்தில் நேரிடையாக சென்றிட முடியும். எந்த மத்தியஸ்தமும், தேவனுக்கும் நமக்கும் இடையில் இனி அவசியமில்லை! அல்லது, யாதொரு மத்தியஸ்தரும் தேவனுக்கும், நமக்கும் இடையில் வரத்தேவையில்லை! இன்று நம் எல்லோருக்கும் இயேசு கூறும் நற்செய்தி என்னவென்றால், "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" என்ற பேரின்பமேயாகும்!*

*- பிலிப்பு யான்ஸி (கொலரோடா USA)*

---

## இயேசுவின் பிரசங்க வல்லமையின் இரகசியம்!

*மனிதனின் 'இருதயத்தைப் பார்த்தே' இயேசு பேசினார்*

*கிறிஸ்து அதிகாரத்துடன் பிரசங்கித்தார்! வசனத்தைக் கேட்ட ஜனங்கள், இவர் வேதபாரகரைப்போல் போதிக்காமல் அதிகார முடையவராய் போதிக்கிறாரே! என்று, ஆச்சரியப்பட்டார்கள். இயேசு வருவதற்கு முன், தீர்க்கதரிசிகளின் சத்தம் நின்று வெகு காலமானது. ஜனங்களை ஏவி எழுப்பிவிடும் தேவ வாக்குகள் ஓய்ந்தன! வேதபாரகர் மாத்திரமே வேதத்தைப் போதிக்க வேண்டியவர்களாயிருந்தார்கள். அவர்கள் ஜீவியம் பாழாய்ப்போனதால், உண்மையான வேதத்தின் மாட்சிமை, அவர்களுக்கு விளங்கவில்லை. அனுபவத்திலிருந்து போதித்திடவும் திராணியில்லை! ஆகையால், ஜனங்களை ஏதாகிலும் ஒரு வழியில் உற்சாகப்படுத்தும்படி கணக்கற்ற விதிகளையும், சட்டங்களையும், ஆசாரங்களையும் ஏராளமாய் உண்டுபண்ணிப் போதித்தார்கள்!*

"**வேதத்தைப் பார்க்கிலும் பாரம்பரியங்களையும், சுய வியாக்கியானங்களையும் மாத்திரமே வேதபாரகர் முக்கியப்படுத்தினார்கள்.**

*நிச்சயமான உறுதியோடு ஒன்றும் போதிக்கக் கூடாமல், "முன்னோர்கள் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள், அவர்கள் இப்படிச் சொல்லியிருக்கிறார்கள்" என்றே பிரசங்கித்தார்கள்!*

*'நாங்கள் ருசித்து அறிந்தது ஒன்றுமில்லை' என்பதுபோல் பேசுவோமானால், அதைப்போல் பரிதாபம் வேறில்லை! அவர்களும் ஜீவனைக் கண்டதில்லை. ஜீவனுக்குள் பிரவேசிக்க விரும்பினவர்களுக்கும் இடறலாய் இருந்தார்கள்! சுமக்க அரிதான சுமைகளை மனுஷர் மேல் சுமத்தினார்கள்! குருடருக்கு வழிகாட்டின குருடரானார்கள்!*

இவர்கள் புதிது புதிதாக உண்டுபண்ணின **அவர்களுக்கு விருப்பமான** ஆசாரக் கொள்கைகளை ஜனங்கள் கைக்கொள்ளக் கூடாமல், தவித்தார்கள். அவைகள் அனைத்தும் வேதபாரகரைப் பிரியப்படுத்தும் கட்டளைகளாகவே இருந்தன. அவை தனி ஜீவியத்துக்கும், குடும்ப ஜீவியத்துக்கும், மார்க்க அனுசாரத்திற்கும், மற்ற விஷயங்களுக்கும் ஜனங்களை அநியாயமாய் கட்டுகிற, சகிக்கக்கூடாத பிரமாண கட்டுகளாயிருந்தன!

ஜெப ஆலயத்தில் ஆத்தும பசியோடு கூடின ஜனங்களுக்கு 'இவ்வாறான உமிகளையே' புசிக்கக் கொடுத்தார்கள். அப்பங் கேட்டவர்களுக்குக் கல்லைக் கொடுத்தார்கள்! சுமக்க முடியாத இந்தப் பாரத்தால், ஜனங்கள் தங்களுக்குள் பெருமூச்சுவிட்டார்கள். ஜீவ வழி காட்டுவாரில்லை; ஆத்தும இளைப்பாறுதல் அருளுவாரில்லை; சமாதான வழியைக் காண்பிப்பாரில்லை!

> "
> **எங்கே சடங்குகளும், மனுஷருடைய முன்னோர் பாரம்பரியங்களும், புறம்பான ஆசாரங்களும் பெருகுகிறதோ, அங்கே ஆவிக்குரிய உள்ளான ஆசீர்வாதங்கள் ஒழிந்ததென்பது நிச்சயம்!**

நன்றாய் செழித்தோங்கி நிற்கும் மரத்தின்மேல், ஒருவகை அந்நியசெடி படருவதுண்டு. அது பார்க்க அலங்காரமாயிருக்கும். 'அப்படியே படரவிட்டால்' அது வெகு சீக்கிரத்தில் மரத்தின் சாரத்தை உறிஞ்சிவிடும். அதுபோலவே, மானிட சடங்காச்சாரங்களினால் கட்டுண்ட அன்றைய யூத ஜனங்கள், மரண விளிம்பிற்கு சென்று விட்டார்கள்! மகா பெரிய அந்தகாரம் அவர்களை மூடிக்கொண்டது!

*இப்போது கிறிஸ்து போதித்தவுடனே, வேதபாரகருக்கும் அவருக்குமுள்ள வித்தியாசத்தை ஜனங்கள் உடனே கண்டார்கள். அந்த மூப்பர்கள் தங்கள் பாரம்பரியங்களால் வேதத்தை மூடியிருந்த மூடலை, இவர் துடைத்து எறிந்து, உள்ளான தேவமகிமையை வெளிப்படுத்தினார்! அவர்களைப் போல் உமியைக்கொடாமல், அப்பத்தைக் கொடுத்தார். பாரமான விதிகளை அவர்கள் தோள்மேல் சுமத்தாமல், ஆத்தும இளைப்பாறுதலை அருளினார்! அவர்களைப்*

*போல் சந்தேகத்தோடு பேசாமல், பூரண நிச்சயத்தோடும் மகா உறுதியோடும் பேசினார்! அந்தகாரம் நீங்கி வெளிச்சம் பிரகாசித்தது! வெகுகாலம் மறைந்திருந்த யேகோவா தேவன், அவர்கள் கண்களுக்கு முன் பிரத்தியட்சமாகத் தோன்றினார்!*

> **தீர்க்கதரிசிகள் யாவரும் "கர்த்தர் சொல்லுகிறார், கர்த்தர் சொல்லுகிறார்" என்று போதித்திருக்க, இவரோ, மகா அதிகாரத்துடன் "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று 'ஜீவிய சுடருடன்' போதித்தார்!**

*இப்படிப்பட்ட ஜீவனுள்ள போதனையை, அவர்கள் இதுவரை கேட்டதில்லை. வெகுகாலம் வறண்டு போயிருந்த அவர்கள் ஆத்துமா, ஜீவ தண்ணீரைக் கண்டது! அதிகாரமுள்ள அவர் போதனையை வேதபாரகரும் கேட்டு அஞ்சி நிற்க வேண்டியதாயிற்று! "ராஜாவின் வார்த்தை எங்கேயோ அங்கே அதிகாரம் உண்டு" அல்லவோ? (பிர.8:4). அவர் சுயமாய் பேச வந்தவரல்ல. ஜனங்களின் சீர்கெட்ட நிலைமை அவருக்குத் தெரியும். ஆகவே, பரத்தின் தேவ வார்த்தையைக் கொண்டு வந்தார்! இந்த பூமியில், தேவசித்தத்தைப் பூரணமாய் நிறைவேற்ற துரிதம் கொண்டார்! தாம் உலகத்தில் வந்த நோக்கத்தை அவர் அறிந்திருந்தார். சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் சற்றும் தளராமல், ஜீவசெய்தியை பிரகடனப்படுத்தினார்!*

> **வேதத்தைப் போதிக்கிறவராக மாத்திரமல்ல, வேதத்துக்குத் 'தாமே' அதிகாரியாக நின்று சத்தியம் பேசினார்!**

*ஜனங்களுடைய இருதயம் உடைபட்டது! சடங்காசாரங்களும், மூட பக்தியும் ஆலயங்களை ஆண்டுகொண்டு, அக்கிரமங்கள் மிகுதியாய் பெருகின அக்காலங்களில், ஆவியினால் நிறைந்த இயேசுவின் பிரசங்கம்* **பெரிய எழுப்புதல் தீ பரவி,** *அவருடைய போதகம் 'பெரிய அசைவை' ஜனங்களிடத்தில் உண்டாக்கிற்று! இயேசுவைப் போலவே ஜீவியத்தில் பரிசுத்தமும், சத்தியத்தின் வழியில் நடப்பவர்களாய், நாமும் இருந்திட வேண்டும்! அனல்கொண்ட ஜீவியத்தோடு, ஜனங்கள் மீது மனுதுருக்கம் நிறைந்தவர்களாய் போதிக்கும்போது, இயேசு கொண்டிருந்த அதிகாரத்தொனி, நம்மிலும் காணப்படும்! வேதபாரகரைப்போல் ஊழியம் செய்யாதபடி இயேசுவைப் போல ஊழியம் செய்திட, நாம் எச்சரிக்கையாயிருப்போமாக!*

**அவர் 'மனுஷருடைய இருதயத்துக்கே' பேசினபடியால் முக தாட்சணியம் அவரிடத்தில் இல்லை.** *"நீர் முகதாட்சணியம் இல்லாத*

போதகரென்று" இயேசுவின் சத்துருக்களே சொன்னார்கள்! அவர், ஜனங்களுடைய அந்தஸ்தையும் அதிகாரத்தையும், உத்தியோகத்தையும் ஐசுவரியத்தையும், அறிவையும், உடைநடை பாவனை முதலான தோற்றங்களையும் கவனிக்கவேயில்லை! அவர்களின், இருதயத்தை மாத்திரம் பார்த்தாரே அல்லாமல், மனுஷருக்குள் மேன்மையாக எண்ணப்படுகிற புறம்பான எந்தக் காரியத்தையும், அவர் கவனிக்கவே இல்லை! அவர் போதனையில் விளங்கிய வல்லமையின் இந்த இரகசியங்கள், நம்மையும் அவர் போலவே அனல் கொண்ட ஊழியர்களாய் மாற்றுவதாக! ஆமென்.

- S.பரமானந்தம்

---

## நாம் 'சபை கூடிவரும்' முக்கியத்துவம் அறியுங்கள்!

*சபையை புறக்கணிப்பது 'தெய்வ கிருபையை' புறக்கணிப்பதாகும்*

கிறிஸ்தவத்தின் உயர்ந்த சிறப்பு என்னவென்றால், அங்குள்ள மக்கள் இயற்கையாகவே ஒன்று கூடிவரும் மகிழ்ச்சி நிறைந்தவர்கள்! குறிப்பாய் "பரிசுத்தவான்களாய் வாழ்ந்திட விரும்பும் கிறிஸ்தவர்கள் ஓர் சபையாகக் கூடிவரும் பொறுப்பை" வலியுறுத்துவார்கள்! பரிசுத்தம் நாடும் பிற மார்க்கங்கள், எப்போதுமே ஒரு தனிமனித 'குருஜியின்' தூய்மையை மாத்திரமே போற்றி வாழ்வார்கள்! தங்களை சூழ்ந்திருக்கும் கிறிஸ்தவ விசுவாசிகளை 'ஒன்றுகூடிவர' கிறிஸ்தவம் ஒன்று மாத்திரமே வலியுறுத்துகிறது!

> **"மெய்யாகவே, அவ்வாறு கூடிவந்த கிறிஸ்தவ விசுவாசிகளாகிய சபை மீது "தேவனுடைய விசேஷித்த கிருபை" இறங்கி வருவதை, அவர்கள் இன்றுவரை அனுபவித்து வருகிறார்கள்!**

இதனிமித்தமே 'சிலர் விட்டு விடுவதைப்போல்' சபை கூடிவருதலை நீங்கள் விட்டுவிடாதிருங்கள்! என வேதப்புத்தகம் கிறிஸ்தவர்களுக்கு கட்டளையிட்டு கூறுகிறது! (எபி.10:25). ஓரிடத்தில் ஒன்றாய் கூடிவரும் கிறிஸ்தவர்களையே 'தேவ சபை' என வேதம் அழைக்கிறது!

தேவஜனங்கள், கர்த்தர் தாபரிக்கும் ஸ்தலமாய் கூடிவரும்படி, ஏற்கனவே பழைய உடன்படிக்கையில் கட்டளையிடப்பட்டதை நாம் காண்கிறோம். இப்போதோ "தேவன் வழங்கும் கிருபையைப்" பெற்றிடும் ஸ்தலமாக, அவரது புதிய ஏற்பாட்டு சபை விளங்குகிறது!

*சபைகூடிவருதலை விட்டுவிடுகிறவன் 'சபையில் தேவன் அருளும் கிருபையை புறக்கணிக்கிறான்' என்ற சத்தியம் நமக்கு எச்சரிக்கை*

*யாயிருக்கிறது! அந்த எச்சரிப்பு மிகத்தெளிவாய் நமக்கு கூறும் செய்தி என்னவெனில்: பரிசுத்தவான்களோடு கூடிவரும் சபையை புறக்கணிப்பவன் 'மதியீனன்' என்றே நாம் கூறவேண்டும்!*

புதிய ஏற்பாட்டில் 'ஒன்றாய் கூடிவரும்' சபைகூடுதல் பலமுறை குறிப்பிடப்பட்டுள்ளது:

*1.* ஆண்டவர் இந்த பூமியில் இருந்தபோது, தன் சீஷர்களோடுதான் அதிகமாய் இருந்து அவர்களை சந்தித்தார். 'சிலசமயங்களில்' சீஷர்களோடு இயேசு தனிமையாய் பேசினாலும், அவர்களோடு சேர்ந்து இருப்பதற்கே அதிகமாய் விரும்பினார்!

*2.* சீஷர்களோடு சேர்ந்து படகில் பயணம் செய்தார்! சீஷர்களோடு மலைமேல் ஏறிச்சென்று, அவர்களோடு அமர்ந்து ஐக்கியம் கொண்டிருந்தார். காட்டிக்கொடுக்கப்பட்ட ராத்திரியின் கடைசி போஜனத்தைக்கூட, தன் சீஷர்களோடுதான் அமர்ந்து புசித்து பானம் பண்ணினார்!

*3.* பெந்தேகொஸ்தே நாளின் முன்பாக, சீஷர்கள் ஒருமனதாய் ஒன்றுகூடி ஜெபத்தில் உறுதியாய் தரித்திருந்தார்கள்! பெந்தேகொஸ்தே நாளிலும், அனைவருமாய் சேர்ந்து ஒரே ஸ்தலத்தில் ஒன்று கூடினார்கள்! மேலும், அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் கர்த்தருடைய வார்த்தையை ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்ற அனைவரும் "அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய் தரித்திருந்தார்கள்" என வாசிக்கிறோம் (அப்.2:42).

*4.* பிறகு ஏற்பட்ட உபத்திரவ நாட்களிலும், அவரவர் தங்கள் ஸ்தலங்களில் ஒன்றுகூடி, ஜெபித்து வந்தார்கள்! பேதுரு அற்புதமாய் சிறையிலிருந்து விடுதலைபெற்று, விசுவாசிகள் **ஒன்றுகூடி ஜெபித்த** வீட்டிற்கே சென்றார்!

தொடர்ந்து, எல்லா நிருபங்களிலும் "சபையாய் ஒன்றுகூடுவதை" விசுவாசிகளுக்கு வலியுறுத்தப்பட்டிருக்கிறது. கொரிந்தியர் முதலாம் நிருபத்திலும் "**நீங்கள் சபையாய் கூடிவரும்போது**" என்றே பவுல் தன் செய்தியைத் தொடங்கினார்.

> **"தன்னை கிறிஸ்தவன் என்று அழைத்துக் கொள்ளும் ஒரு விசுவாசியாகிலும் "கூடிவரும் சபைக்கு" வெளியே நின்றுவிடக் கூடாது!**

'சபை' என்பதற்கு மூல கிரேக்க பாஷையின் அர்த்தம் என்ன? **உலகத்திலிருந்து அழைக்கப்பட்டு வெளியே வந்தவர்கள், ஒன்றுகூடி வருவதே (ECCLESIA) சபையின் மெய்யான அர்த்தமாகும்.** ஆகவே,

*'நாங்களும் உலகத்திலிருந்து பிரிந்து அழைக்கப்பட்டவர்கள்' எனக்கூறும் அனைவரும், ஒன்றாய் கூடிவரும்படியே கட்டளையிடப் பட்டிருக்கிறார்கள். அப்படியில்லாமல், தாங்கள் விரும்பினபடியே அவரவர் இருப்பார்களென்றால் 'சபையும்' அவ்விடத்தில் இருக்காது! ஆகவே, நாம் சபையாய் கூடிவரும் மேலான பங்கை உணர்ந்தவர் களாய், பொறுப்புடன் நடந்து கொள்வோமாக!*

*- வாட்ச்மென் நீ*

---

## 'இணைத்திடும்' சமாதானமே, தேவன் விரும்புகிறார்!

*சமரசப்படுத்தும் சமாதானம் நிலையற்றது*

இங்கிலாந்து தேசத்தின் ஒரு சித்திரக்கூடத்தில் 'ஒரு அழகிய ஓவியத்தை' நான் கண்டேன். அந்த ஓவியம், ராணுவத்தில் பணியாற்றிய ஒரு வீரனைப் பற்றியது. யுத்த களத்தில், எங்கெல்லாம் தொடர்பு துண்டிக்கப்பட்டதோ, அங்கெல்லாம் சென்று பழுதுபார்க்கும் பொறியாளராய் இருந்தார். இவ்வாறு ராணுவ தொடர்பை சரிப்படுத்தும் அவரது செயலால், ஆயிரக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்பட்டிருந்தன. அதுபோலவே, இந்த முறையும் தொடர்பு துண்டிக்கப்பட்ட இணைப்பு கம்பிகளை சேர்த்து வைத்திட ஓர் ஆழமான குழியைத் தோண்டினார். துண்டிக்கப்பட்ட அந்த கம்பிகளைக் கண்ட அவர், அதை இணைப்பதற்குரிய உபகரணம் இல்லாதபடியால் மனவேதனையடைந்தார். அதே நேரத்தில், அவரைச் சுற்றிலும் குண்டுகள் பல வெடித்துக் கொண்டிருந்தன. இவரோ முடிவாக, மன உறுதியோடும், தைரியத்தோடும், குழியின் ஆழத்திற்குள் கரங்களை விட்டு அந்த துண்டிக்கப்பட்ட கம்பிகளை, தன் கரங்களால் முடுக்கி வைத்து இணைத்துவிட்டார். இத்தனை ருசிகரமான அந்த ஓவியத்திற்கு கீழாக "**இணைப்பு**" **(THROUGH)** என்ற தலைப்பு கொடுக்கப்பட்டிருந்தது.

இப்போது சத்தியம் ஒன்று கேளுங்கள்: "கிறிஸ்து தன் சிலுவையில் கொடூரமாய் மரணமடைந்தே, தேவனுக்கும், மனிதனுக்கும் இடையில் ஏற்பட்ட பிளவை இணைத்துவிட்டார்". இதற்கு வேதம் கொடுத்திருக்கும் தலைப்பு என்னவென்றால், "**அவரே நமது சமாதானத்திற்கு காரணர்**" என்பதுதான்! (எபே *2:14*).

> "**தூரமாய் பிரிந்திருந்த, இருதிறத்தாரும் சமீபமாய் நெருங்கி வந்து 'இயேசுவின் மரணத்தினால்' அந்த இருவரும் ஒன்றானார்கள். இவ்வாறாக, கிறிஸ்து மூலமாகவே நாம் தேவ சமாதானத்தின் இணைப்பை பெற்றோம்!**

*இந்த மனுக்குலத்திற்கு, தேவன் ஒருபோதும் சத்துருவாய் நின்றதில்லை! ஆனால், நாம் நாமாகவே "தேவனுடைய சத்துருக்களாய்" மாறி விட்டோம்! இவ்வித கிளர்ச்சியான நம்முடைய எதிர்ப்பு, அன்று ஏதேன் தோட்டத்தில் துவங்கியது. அன்று ஆதாம் தேவனுக்கு விரோதமாய் கிளர்ச்சியை ஏற்படுத்தி, சாத்தானோடு கைகோர்த்துக் கொண்டான். இங்கிருந்துதான் 'விரோதம்' துவங்கியது. ஆதாம், தானே செய்துகொண்ட விரோதத்தால், மனுக்குலத்திற்கு* **பெரிய பிளவு** *ஏற்பட்டுவிட்டது! பகையும், விரோதமும் ஒரே வேரிலிருந்து முளைத்து வருவதேயாகும்.*

**"இந்த மானிட சரித்திரத்தில், 'தேவன் இல்லாமலே' மகிழ்ச்சியாகவும், சமாதானமாகவும் இருப்பதற்கு மானிடன் எடுத்துக் கொண்ட அத்தனை முயற்சியும் பலனற்றுப்போனது என்பதைக் காண்கிறோம்.**

*எப்போதெல்லாம் இஸ்ரவேல், யெகோவா தேவனை ஆராதிப்பதை விட்டுவிலகி, விக்கிரகங்களை ஆராதிக்கத் திரும்பினார்களோ, அப்போதெல்லாம் இஸ்ரவேல் சமாதானத்தை இழந்தது! மற்ற தேசங்களுக்குப் பலியாகிப்போனார்கள்! அதன் விளைவாய், தொடர்ச்சியான யுத்தங்களையும் சந்தித்தார்கள்! ஜீவனுள்ள தேவனைவிட்டு விலகும் அடிச்சுவடு பதித்த நேரங்களில், 'கலகத்திற்கு நேராய் திரும்பும்' வாழ்க்கையின் பாதையில் சென்றிட துவங்கி விட்டார்கள்!*

*அன்றைய நாளில்* **ஹிட்லர்,** *பகிரங்கமாய் வேதப்புத்தகத்தையும், கிறிஸ்தவத்தையும் அவமதித்து, அதை புறக்கணித்தான்! பின்பு* **"உயர்குலத்து ஆரியன் சபை"** *என்ற பெயரில் புராண தெய்வங்களுக்கு ஒப்பான சித்திர விக்கிரகங்களைக் கொண்டுவந்து வைத்தான். அந்த சிலைதெய்வங்கள் கோபமும், யுத்த முகமும் கொண்டதாய் இருந்தன! இதற்குப் பிறகு, ஜெர்மானிய தேசத்தில் என்ன சம்பவித்தது என்ற சரித்திர பூர்வமான உண்மை நம் யாவருக்கும் தெரியும். உலகத்தின் வெளித்தோற்றத்தில் வெற்றி கண்டு, வலிமையாய் தோன்றிய ஹிட்லரின்யுத்த பலம், வெகு சீக்கிரத்தில் உடைந்து 'தவிடுபொடியாய்' போய்விட்டது! இரண்டாவது உலக மகாயுத்தத்தின் சீரழிவிலிருந்து 'நவமான ஜெர்மனி' உதித்து வந்ததை இன்று நாம் யாவரும் அறிந்திருக்கிறோம்.*

*இன்று வாழும் ஜெர்மானிய மக்களிடம், சமாதானத்தை விரும்பும் விசுவாசமே மலர்ந்திருக்கிறது.... அல்லாமல் யுத்தத்தை சிறிதளவேனும் அவர்கள் விரும்பவில்லை! இதை இயேசு குறிப்பிடும்போது, சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்,*

*அவர்கள் மாத்திரமே தேவனுடைய பிள்ளைகளென அழைக்கப் படுவார்கள்! எனக் கூறினார். கவனியுங்கள், 'சமாதானம் பண்ணுகிறவர்' என்றுதான் இயேசு கூறினாரே அல்லாமல், சமரசம் செய்து வாழ்ந்து கொள்ளலாம் என, அவர் கூறவே இல்லை. ஏனெனில் சமாதானமாய் இருப்பதற்கும், சமரச பேச்சிற்கும் இடையில் பெரும் வித்தியாசம் உள்ளது!*

**"எங்கேயிருந்து சமாதானம் துவங்கவேண்டும்? சமாதானத்தின் புத்திரர்களாய் நாம் எப்படி மாறமுடியும்? என்ற கேள்விகளுக்கு ஒரே விடை "அவரே நமக்கு சமாதான காரணர்" என்ற சத்தியமேயாகும்.**

யுத்தங்கள் நிகழ்த்தி ஒருபோதும் சமாதானத்தை நிலைநாட்டிட முடியாது! யுத்தங்கள் செய்திடும் இனப்பெருக்கமெல்லாம், தரித்திரம்! மனசோர்வு! வேதனைகள்! பகைமை! வெறுப்பு! என்ற நீண்ட பட்டியலிருக்கிறது. அது ஏனென்றால், எந்த யுத்தங்களும் "நிரந்தர சமாதான தீர்வை" கொண்டு வருவதில்லை. ஏதாகிலும் வழியில் நாமாக நமக்கு சமாதானத்தை கண்டுபிடிக்க கூடுமோ? மனோதத்துவ நிபுணர்கள் கூறுவதெல்லாம், **சமாதானம் உள்ளத்திற்கும், மனதிற்கும் மாத்திரமே சொந்தமானது... அது வெளியிலிருந்து வருவதில்லை** என்றே திட்டமாய் கூறுகிறது. ஆகவே, நீங்கள் மெய்யாகவே சமாதானத்தை நாடும் புருஷராய் இருந்தால்: உங்கள் வெகுளியான பயத்தையும், மன உளைச்சலையும், நம்பிக்கை இழந்த வேதனைகளையும், புறம்பே தள்ளிவிட்டு சமாதானத்தின் காரணராய் இருக்கும் "இயேசுவிடம் வந்து அவரையே அண்டிக்கொள்ளுங்கள். உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக" எனக்கூறும் அவரது வாழ்த்துக்கள் உங்கள் இருதயத்தில் துவங்கட்டும். அவர் ஏற்படுத்தும் 'இந்த இணைப்பே' மெய்யான தேவ சமாதானமாகும்! மனுஷீகமான 'சமரசப்படுத்தும் சமாதானம்' நிலையற்றது என்பதை உணர்ந்து, அவர் தரும் சமாதான இணைப்பை பெற்று, தேவபுத்திரர்களாய் வாழ்வோமாக!

*- பண்டிதர் பில்லி கிரஹாம் USA*

---

## இயேசு அருளிய, அன்பின் சீஷத்துவம்!

*தெய்வ அன்பிற்கு நாம்பட்ட கடன்*

கடன்படுவது என்றால் "அதை திருப்பிச் செலுத்த வேண்டும்" என்பதுதான்! அது ஏனென்றால், அந்தப் பணம் வேறொருவருடையது! அதுபோலவே, 'ஒருவரிலொருவர் அன்புகூருகிற' கடனும் இருக்கிறது! என, ரோமர் 13:8-ம் வசனம் எடுத்துரைக்கிறது! அதுஏனென்றால்

**அன்பிற்கு சொந்தமானவர் வேறொருவர்** என்பதுதான்! "அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது" என்றே 1யோவான் 4:7 கூறுகிறது! ஆம் 'தேவன் ஒருவர் மாத்திரமே' அன்பாகவே இருக்கிறார்! (1யோவான் 4:16). அன்பு இன்னதென்று நாம் அறியோம்!

> **"மனுஷன் அறிந்த அன்பெல்லாம், என்னை சிநேகிக்கிறவனையே நானும் சிநேகிப்பேன் என்பதுதான்! "அவன் என்னை சிநேகிக்காமல் பகைத்தால், நானும் அவனை பகைப்பேன் என்பதுதான்!" (மத்.5:44,46).**

ஆனால் "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்த தினாலே, தேவன் நம்மேல் வைத்த 'தெய்வ அன்பை' நாம் அறியும்படி இயேசு வாழ்ந்து, நிரூபித்து வெளிப்படுத்தினார்! (ரோமர் 5:8). ஆகவே, நமக்குத் தரப்பட்ட ஆசீர்வாதமான கடன் "தெய்வ அன்பின் கடனேயாகும்!"

தெய்வ அன்பை திரும்பச் செலுத்தும் நமது **1) முதல் ஆசீர்வாதம்:** நாம் தேவனை அன்புகூர்வதும், தெய்வ அன்பில் நிலைத்திருப்பதுமேயாகும் **2) இரண்டாம் ஆசீர்வாதம்:** தேவனை அன்புகூர்ந்த நாம், அவரது கற்பனைகளை கைக்கொண்டு, பிறரை அன்புகூர்ந்து, இயேசுவைப்போல் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவதாகும் **3) மூன்றாம் ஆசீர்வாதம்:** அவரின் கட்டளையாகிய "உலகெங்கும்போய்" மற்றவர்களுக்கு நாம் பெற்ற தெய்வ அன்பின் சுவிசேஷத்தை அறிவிப்பதாகும் **4) நான்காவது நிறைவான ஆசீர்வாதம்:** நாம் பெற்ற தெய்வ அன்பைக் கொண்டு, கணவன் மனைவி, சகோதரன் சகோதரி, தாய் தகப்பன், சபையின் குடும்பத்தார்.... ஆகிய யாவரையும் 1யோவான் 4:10 கூறுகிறபடி "அவர்கள் நம்மை அன்புகூர்ந்ததால் அல்ல, நாம் அவர்களை முடிவுவரை அன்புகூர்ந்திடும்" மகிழ்ச்சியே, தெய்வ அன்பை நம்மில் பூரணப்படுத்தும்! (1யோவான் 4:12). "தேவனிடமிருந்து வாங்கிய தெய்வ அன்பை" அவருக்கு திரும்பச் செலுத்த வந்த நம்மைப் பார்த்து, "**நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருந்து**" தெய்வ அன்பின் கடனை செலுத்துங்கள் என, ஆண்டவர் இயேசு நமக்கு கட்டளையிட்டிருக்கிறார்! (யோ.13:34).

அன்பின் ராஜ கட்டளைப்படி "தெய்வ அன்பின் பயணத்தையே" சீஷர்கள் தங்கள் குருவாகிய ஆண்டவர் இயேசுவிடம் கற்றுக்கொண்டு, அவரைப் பின்பற்றினார்கள்! "நீ என் அன்பில் நிலைத்திருந்தால், சீஷனாகிய சீமோனே, நீ என் ஆட்டுக்குட்டிகளையும், என் ஆடுகளையும், நீ பெற்ற தெய்வ அன்பின் மேய்ச்சலில் நடத்துவாயாக!" என, உயிர்த்தெழுந்த இயேசு, இறுதியாகக் கூறினார்! (யோ. 21:15-17).

**1.'அன்பு கடன்' செலுத்தும் முதல் ஆசீர்வாதம் :** *"அவர் முந்தி (முதலாவதாக) நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்"* என்பதேயாகும் *(1யோவான் 4:19).* ஆகவே, "தேவன் என்னை நேசிக்கிறார்" என்ற விசுவாசத்தில், எந்த சூழ்நிலையிலும் அவரது அன்பை சந்தேகிக்காமல், கேள்வி கேட்காமல், **அவரை நேசித்திடும் நேசம்** நம்மில் நிலைத்திருக்க வேண்டும். அவர்களே, தேவனிடத்தில் அன்புகூருகின்ற எனக்கு "சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே" தேவன் கிரியை செய்வார்! என, அவரது அன்பில் உறுதிகொண்டிருப்பார்கள்! (ரோமர்8:28). ஆகவே "உபத்திரவமோ, வியாகுலமோ..... நாசமோசமோ, பட்டயமோ.... ஆகிய எதுவும் என்னை கிறிஸ்துவின் அன்பைவிட்டு பிரித்திட இயலாது!" என்ற விசுவாசமும் அவனுக்குள் பூரித்திருக்கும்! "என்னை அன்புகூருகிறவராலே" முற்றிலும் ஜெயம் பெறுவேன்! என்ற அறிக்கையே, நாம் அவருக்கு செலுத்தும் முதலாவது தெய்வ அன்பின் கடன் (ரோமர் 8:36,37).

**2. இரண்டாம் ஆசீர்வாதம் :** "அன்பு" பிறருக்கு பொல்லாங்கு செய்யாது! அது, நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது! (ரோமர் 13:10). எப்படியெனில் "விபச்சாரம் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக.... போன்ற நியாயப்பிரமாண கற்பனைகள், "உன்னிடத்தில் அன்புகூருகிறதுபோல, பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" என்ற ஒரே வார்த்தையில் இப்போது தொகையாய் அடங்கியிருக்கிறது! (ரோமர் 13:9). இயேசு தன் சீஷர்களுக்கு, மலைப்பிரசங்கத்தில் கற்றுத்தந்த அன்பின் கற்பனை, நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதல் என்றே இயேசு கூறினார்! எப்படியெனில் "ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிறவன், தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரஞ் செய்கிறான்" என இயேசு கூறிய 'ஒரு ஸ்திரீ' என்பவள், யாரோ ஒருவரின் மகள் அல்லது மனைவியை தீண்டுவதாகவே உள்ளது! நீங்கள் நேசிக்கும் உங்கள் மனைவி, உங்கள் மகளுக்கு அப்படியொருவன் தீண்டினால், நீங்கள் அதை அருவருத்து ஏற்றுக்கொள்வதில்லையே.... அதுபோலவே, நியாயப்பிரமாணத்தின் **எல்லா கற்பனைகளையும் 'அன்பின் ஆதாரமாய்'** சீஷர்களுக்கு கட்டளையிட்டு போதித்தார்! இவ்வாறு "இயேசுவை அன்புகூர்ந்து, அவரது கட்டளைகளை ஒரு சீஷன் நிறைவேற்றுவதே" அவன் இரண்டாவதாக செலுத்த வேண்டிய அன்பின் கடன்!

**3. மூன்றாம் ஆசீர்வாதம் :** இயேசு கட்டளையிட்டபடி தெய்வ அன்பை 'உலகெங்கும் போய்' மற்றவர்களுக்கு "அன்பின்

*சுவிசேஷத்தை" அறிவிப்பதும், நாம் செலுத்த வேண்டிய அன்பின் கடனேயாகும்! (மத்.28:18-20).* **"சுவிசேஷத்தை நான் பிரசங்கிப்பது,** *என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது!" (1கொரி.9:16). ஆகவே, சுவிசேஷம் அறிவிப்பது யாருக்கோ உள்ள அழைப்பு என புறக்கணிப்பது, நாம் பட்ட தெய்வ அன்பின் கடனை, திருப்பிச் செலுத்த மறுப்பதாகும்! 'ஆத்தும பாரம்' 'ஆத்தும ஆதாயம்' போன்ற இனிய பங்கை புறக்கணிப்பது, அவர்களின் வாழ்வில் 'நற்செய்தியை' புறக்கணிப்பதாகும்! ஏனெனில், சுவிசேஷம் அறிவிக்கிறவன் வாழ்விலே, 'நற்செய்தி' ஏராளமாய் அருளப்படும்! (1கொரி.9:14).*

**4. நான்காவது நிறைவான ஆசீர்வாதம் :** *நாம் பெற்ற தெய்வ அன்பை, கணவன் மனைவி; சகோதரன் சகோதரி; தாய் தகப்பன்; சபையின் குடும்பத்தார்..... ஆகியோருக்கு, முடிவுபரியந்தம் அன்பு செய்வதேயாகும்! "நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்வதினால் அன்பு உண்டாயிருக்கிறது என்றும்! இவ்வாறு ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்திடும் பயணமே 'தெய்வ அன்பை' நமக்குள் பூரணப்படுத்தும்!" என 1யோவான் 4:10,11,12 நிறைவாய் கூறுகிறது! இயேசு கற்றுத்தந்த 'சிலுவையின் வழி' கண்டவன் மாத்திரமே, கல்வாரி அன்பின் உயர்ந்த நிலைக்குச் சென்று, தன்னையே நேசிக்கும் சுயத்தை வெறுத்து, முடிவுவரை அன்பில் நிலைத்து ஜெயம் பெறுவான்!*

**நாம் பெற்ற தெய்வ அன்பின் கடனை "நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்புகூர்ந்தால்" அதுவே போதுமென,** *இயேசுவின் கட்டளை, நிறைவடையச் செய்கிறது! "துன்மார்க்கன் தான்பெற்றுக்கொண்ட கடனை செலுத்தாமல் போகிறான்! ஆனால், பணத்தைவிட மேலாய் 'இரக்கத்தையும் அன்பையும்' பிறருக்கு செலுத்துகிறவன் நீதிமான் மாத்திரமல்ல, அவன் நல்லவன்! பிறருக்கு அன்பு செலுத்தும் சிலுவை பாதையில் சற்று தள்ளாடினாலும், கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்கி நடத்துவார்!" என ஆறுதலாய் கூறும் சங்கீதம் 37:21-24 வசனங்களைப் பாருங்கள்!*

*"நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்! அதினால் மாத்திரமே,* **நீங்கள் என்னுடைய சீஷர்களென்று** *உலகிலுள்ள எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" என்ற வசனத்தை மிகுந்த பொறுப்போடு வாழ்ந்து, இயேசு வழங்கிய "அன்பின் சீஷத்துவத்தை" வான் உயரப் போற்றி வாழ்வோமாக! 'தெய்வ அன்பே' இயேசுவின் ஜெயம்! அதுவே, நமக்கும் ஜெயம்! ஆமென்.*

*- T.ரத்தினகுமார்*



## 'ஏழ்மையே' இயேசுவின் வழி
## என அறிவித்த புனிதர்
# பிரான்சிஸ் ஆஃப் அஸிஸி !

12-ம் நூற்றாண்டில் மிக செல்வமான இத்தாலி நாட்டிலுள்ள வீட்டில் வளர்ந்தவர் பிரான்சிஸ் ஆ.்.ப் அஸிஸி. எல்லோராலும் அறியப்பட்ட அந்த பணக்கார வீட்டில், பிரான்சிஸ் ஆ.்.ப் அஸிஸி சிறுபிராயத்திலிருந்தே 'தான் தெரிந்துகொண்ட பாதையில்' உறுதியாக நின்று வளர்ந்து வந்தார். அவருடைய தகப்பனார் செய்து வந்த ஜவுளி வியாபாரத்தில், தன் மகனை மிக உயர்ந்த தொழில் அதிபராய் மாற்றும்படி அதிகம் பிரயாசப்பட்டார். ஆனால், வாலிபத்தை கடந்து வந்த பிரான்சிஸ் உலக ஐசுவரியத்தை புறக்கணித்து "ஏழ்மையின் நற்குணத்தை" அதிகமாய் வலியுறுத்தி, தன் தகப்பனார் தனக்காக வைத்திருந்த இலட்சியத்தை ஏற்க மறுத்துவிட்டார்.

மிக வலிமையான பிரசங்கியாய் பிரகாசித்த பிரான்சிஸ் "தாழ்மையும் ஏழ்மையும் கொண்ட ஜீவியமே" பேரின்பம் கொண்டதென பிரசங்கித்தார். ஏழைகளுக்கு ஊழியம் செய்வதே பாக்கியமென வலியுறுத்தி, குஷ்டரோகிகளை அணைத்துக்கொண்டு முத்தம் செய்வார்! தேவன் படைத்த இயற்கையில் ஈர்க்கப்பட்டு, காற்றையும், சூரியனையும் பார்த்து மகிழ்ந்து பாடித்துதிப்பார்! வாழ்க்கை சரிதையென எழுதும் சரித்திரத்தை வாசிப்பதை விட "தாழ்மை! எளிமை! ஏழ்மை! ஜெப சிந்தை!" ஆகிய நற்குணங்களே எழுத்திலடங்காத ஒளியுள்ள ஜீவியம் என வலியுறுத்தி பிரசங்கித்தார்.

தன் வாழ்வின் இறுதியில், உங்கள் ஜீவியத்தின் இலக்கு இவ்வாறாகவே கீழ்க்கண்டவாறு இருக்கட்டும் என உரைத்தார்:

"கிறிஸ்து தான் நேசித்தவர்களுக்கு வழங்கிடும் பரிசுத்தாவியின் வரங்களையும், கிருபைகளையும் காட்டிலும், அதிக மேலானதையே நாடுங்கள். அது ஏனென்றால் தேவன் வழங்கிடும் இந்த மாபெரும் ஈவுகளைக் குறித்து நாம் மேன்மை பாராட்டுவது எங்ஙனம் தகும்? உண்மையில் அவை அனைத்தும் நம்முடையவைகளல்ல, தேவன் வழங்கியதேயாகும். அப்போஸ்தலனாகிய பவுல் அந்த உண்மையை குறிப்பிட்டு, "உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? நீ பெற்றுக் கொண்டவனானால், பெற்றுக்கொள்ளாதவன் போல், ஏன் மேன்மை பாராட்டுகிறாய்?" என 1கொரிந்தியர் 4:7-ம் வசனத்தில் கூறப்பட்டதை, தேவன் கொடுத்த ஈவுகளாக மாத்திரமே சுட்டிக்காட்டினார். ஆனால், கிறிஸ்து அருளிய மிகப்பெரிய செல்வமெல்லாம், ஒருவன் தன் சுயத்தை ஜெயித்திடும் வழியாக, உபத்திரவங்களை மனப்பூர்வமாய் சகிப்பதற்கும் வையப்படுவதற்கும், இழிவு செய்யப்படுவதற்கும் ஒப்புக்கொடுத்து வாழ்வின் கடினமான தீங்குகளை மனதார ஏற்று வாழ்ந்து முன்னேறுவது மாத்திரமே 'கிறிஸ்துவின் அன்பை பறைசாற்றும்' ஜீவியம்" எனவும், அதுவே செல்வமெனவும் தன் ஜீவ காலமெல்லாம் அறைகூவி, பிரசங்கித்து மகிழ்ந்தார்!

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## வாலிபனே, லோக சிற்றின்பத்திற்காக நித்திய பேரின்பம் இழப்பாயோ?

அழிந்து போகும் உலக வாழ்விற்கு, கண்விழிப்புகளும், பாடுகளும், பிரயாசங்களும், போராட்டங்களும், அலைச்சல்களும் தேவையானால் ஆண்டவர் இயேசுவோடு நித்திய, நித்திய காலமாக, யுகா யுகங்களாக வாழ நம்மை தகுதிப்படுத்திக் கொள்ள எத்தனையாக நாம் விழிப்புடன் பிரயாசப்பட வேண்டும்! இந்த கடுமையான பிரயாசங்களில், திருப்போரில், அநேகர் தேர்ச்சி பெற மாட்டார்கள் என்பதை அறிந்துதான், அருமை இரட்சகர் வெகு திட்டவட்டமாக "ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது, அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" (மத் 7:14) என்று கூறி வைத்துவிட்டார். மெய்தான் 'அநேக கிறிஸ்தவர்கள்' தேவனுடைய பரம இளைப்பாறுதலைக் கண்டு கொள்ள மாட்டார்கள். சமீபத்தில் ஒரு சபையின் பாஸ்டர் என்னை சந்தித்தபோது "சகோதரனே, சபைகளில் மோட்சம் செல்லும் எண்ணிக்கை 100க்கு 10கூட நிச்சயமாக தேறாது" என்றார்கள். அந்த எண்ணிக்கை இன்னும் கணிசமாக குறைந்தாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஏனெனில், மோட்சம் செல்ல நாம் அளிக்க வேண்டிய 'விலைக்கிரயம்' மிகவும் பெரியது. ஆகவேதான், ஜீவவழியைப் புறக்கணித்து, எளிய பாவஇன்ப வழியை நலமென நாடும் மாந்தர்களே இன்று அநேகம் உள்ளார்கள்!

பரலோக பாக்கியம் அடைந்திட மனம் திரும்ப வேண்டும்! மீண்டும் மன்னிக்கப்பட்ட பாவத்தில் ஜீவிக்கக்கூடாது! இனி வரும் நாட்களில் பாவம் செய்திடாமல், பரிசுத்தமாய் வாழ்ந்திட வேண்டும்! இதுபோன்ற உயர்ந்த தெய்வ பண்புகளை நாடிச் செல்வதற்குப் பதிலாய், அநித்தியமான தற்காலிகமான பாவ இன்பங்களை மேன்மையாக நாடி, நித்திய பேரின்பத்தை இழக்கத்துணிவது சரிதானா? ஓ, வாலிபனே, உன் அற்பகால வாழ்க்கையைவிட நித்திய வாழ்வின் மேன்மையை உணர்ந்து, உன் அன்பு இரட்சகர் இயேசுவிடம் உன் வாழ்க்கையை ஒப்புக்கொடுப்பாயாக!

- சுவிசேஷ மலர்

சந்தா அனுப்ப
QR பயன்படுத்தவும்

maduraichristianfellowship
@indianbk

பரலோக பொக்கிஷங்கள்

Published and Owned by:
Madurai Christian Fellowship, Regd Society,
*Editor* T.Rathnakumar, Madurai.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi.